# க.பொ.த (சா.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2016

**தமிழ் மொழியும் இலக்கியமும் I,II** | **மூன்று மணித்தியாலம்**

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க வேண்டியவை :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

- **பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "பொய்கை ஊரான் கேண்மை செய்து இன்புற்ற னெம் செறிந்தன வளையே" இங்கு **கேண்மை** என்பது
(1) நட்பு (2) பகைமை (3) உறவு (4) பந்தம்

2. "கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்" இங்கு **கிம்புரி** என்பது
(1) தந்தம் (2) களிறு (3) மலை (4) சிகரம்

3. "ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை பெருஞ்செல்வம் உற்றக்கடை" இங்கு **தமர்** என்பதன் எதிர்க்கருத்து
(1) உறவினர் (2) அயலவர் (3) பிறர் (4) மேலோர்

4. "கதியிழக்கினும் கட்டுரை யிழக்கிலோ மென்றான்" இங்கு **கதி** என்பதன் எதிர்க்கருத்து
(1) பரகதி (2) கடுகதி (3) அகதி (4) நிர்க்கதி

5. "தேயிலைச் செடியின் அடியிற் புதைந்த அப்பனின் சிதைமேல் ஏழை மகனும்......" இங்கு **அப்பன்** என்பதன் எதிர்ப்பாற் சொல்
(1) அம்மா (2) அம்மணி (3) அம்மை (4) ஐயை

- **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6 பெண் குரங்கு மந்தி; பெண் குதிரை
(1) வடவை (2) குன்று (3) போத்து (4) பிணா

7. புலம்பெயர் தேசம் சென்ற நம்மவர் 'CITIZENSHIP' பெறுவதற்காக நீண்டகாலம் காத்திருக்கின்றனர். இங்கு 'CITIZENSHIP' என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான கலைச் சொல்
(1) விண்ணப்பப்பத்திரம் (2) பிரஜாவுரிமை (3) வாக்குரிமை (4) அனுமதிப்பத்திரம்

8. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன
(1) ஐங்காயம் (2) ஐந்திணை (3) ஐங்கணை (4) ஐந்திலக்கணம்

9. "கிராமத்தவர்களின் ஜீவனோபாயத் தொழிலாக விவசாயம் விளங்குகின்றது." இதில் **ஜீவனோபாயம்** என்பது
(1) அத்தியாவசியம் (2) வாழ்வாதாரம் (3) பொழுதுபோக்கு (4) கூட்டுமுயற்சி

10. பிறருக்கு வாரிக்கொடுப்பதனால் ஒருவருக்கு ஏற்படுகின்ற இன்பம்
(1) இகபர இன்பம் (2) பேரின்பம் (3) ஈத்துவக்குமின்பம் (4) இறுதியில் இன்பம்

/ பக். 2 ஐப் பார்க்க

11. தேரல், தேறல் என்ற சொற்கள் குறிக்கும் பொருள் முறையே
(1) ஆராய்தல், தேன் (2) தேன், ஆராய்தல்
(3) ஆராய்தல், இனிமை (4) சேகரித்தல், தேன்

12. ஒவ்வொருவரும் வாணாளை வீணாள் ஆக்காமல் ஞானம் கைவல்லியமாகும் முயற்சியில் நிற்போமாக. இதில் **வாணாள், வீணாள்** என்பன
(1) இலக்கணப்போலி (2) இடக்கரடக்கல் (3) மரூஉ (4) குழூஉக்குறி

13. உருத்திராட்சப்பூனைகளை நம்பி நாம் ஏமாந்துவிடக்கூடாது. இதில் **உருத்திராட்சப்பூனை** என்பதன் உட்பொருள்
(1) எல்லாவற்றுக்கும் சந்தேகம் கொள்பவர்
(2) பாசாங்கு செய்பவன்
(3) உருத்திராட்சமாலை அணிந்து நடிப்பவன்
(4) தீயவழியில் ஒழுகித் திருந்தியவன்

14. மரத்தின் அடியில் பளீர் பளீர் என்று ஏதோ ஒரு பொருள் மின்னிக் கொண்டிருந்தது. இங்கு **பளீர் பளீர்** என்பது
(1) இணைமொழி (2) அடுக்கிடுக்குத்தொடர்
(3) இரட்டைக்கிளவி (4) அடுக்குத்தொடர்

15. பந்தயத்தின் போது பராக்கு பார்த்ததனால் தோல்வியைத் தழுவினான். - இதில் **பந்தயம், பராக்கு** என்பன
(1) தெலுங்குமொழி (2) கன்னடமொழி (3) கிரேக்கமொழி (4) பாரசீகமொழி

16. காலங்கடந்த முயற்சியின் பயனின்மையை உணர்த்தும் பழமொழி
(1) அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்தியே
(2) அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்
(3) அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
(4) ஆழம் அறியாமல் காலை விடாதே

17. தருமம் தலைகாக்கும் எனும் பழமொழிக்கு ஈடான பிறிதோர் பழமொழி
(1) சிறுகக் கட்டி பெருக வாழ் (2) இட்டுக்கெட்டார் எவருமில்லை
(3) பதறாத காரியம் சிதறாது. (4) மனமுண்டானால் இடமுண்டு

18. "மீகாமன் இல்லா மரக்கலம் போல்" இத்தொடருக்கு ஒப்பான உவமைத்தொடர்
(1) ஆப்பிழுத்த குரங்கைப்போல
(2) ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப் பூ சக்கரை போல
(3) சிறகு இழந்த பறவைபோல
(4) இடையனில்லாத மந்தைபோல

19. விடம், ஒரு மரம், மழை ஆகியவற்றிற்கு நிகரான சொல்
(1) தாலம் (2) தரு (3) நஞ்சு (4) ஆலம்

20. பின்வருவனவற்றுள் பொருளால் வேறுபட்டு நிற்கும் சொல்
(1) கடிதம் (2) நேர்முகம் (3) முடங்கல் (4) திருமுகம்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. "ப" என்ற எழுத்து உச்சரிப்பில் வேறுபடும் சொல்
(1) நாம்பன் (2) ஆம்பல் (3) கோபம் (4) சம்பல்

22. மொழிக்கு முதலில் வரக்கூடிய எழுத்துக்கூட்டம்
(1) அ, க, ட, ர (2) இ, ள, ய, க (3) ப, ம, ர, ஒ (4) அ, ய, ஞ, ச

[பக். 3 ஐப் பார்க்க

23. தோட்டந்துரவு, இடியப்பம் பிட்டு, அண்ணன் தம்பி என்பன
(1) உம்மைத்தொகை (2) உவமைத்தொகை
(3) வேற்றுமைத்தொகை (4) பண்புத்தொகை

24. “அண்ணா வெளிநாட்டிலிருந்து நேற்றுத் திரும்பி வந்தார்” இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை
(1) ஆறாம் வேற்றுமை (2) ஐந்தாம் வேற்றுமை
(3) மூன்றாம் வேற்றுமை (4) நான்காம் வேற்றுமை

25. கூட்டுவினையாக அமைவது,
(1) சுட்டிக்காட்டு (2) மின்சாரம் (3) வகுப்பறை (4) நீர்வீழ்ச்சி

26. கூட்டுப்பெயர் **அல்லாதது,**
(1) வானொலி (2) பனையோலை (3) தொழிலாளி (4) பாடசாலை

27. “வன்கொண்டல் விட்டு மதிமுட்டுவன மாடம் ......” - இங்கு இடம்பெறும் அணி
(1) உவமை (2) உருவகம் (3) தற்குறிப்பேற்றம் (4) உயர்வுநவிற்சி

28. பின்வரும் வாக்கியங்களுள் பெயரெச்சத்தொடர் கொண்ட வாக்கியம் எது?
(1) கிளியைத் துரத்திப் பிடித்தது. (2) உயர்ந்த மலையில் ஏறினான்.
(3) தம்பி விளையாடியதால் களைத்துப் போனான் (4) பறவைகள் வானில் பறந்தன.

29. வேறுபட்ட புணர்ச்சியைக் கொண்ட சொல்
(1) மரப்பட்டை (2) மரத்தொட்டில் (3) மனவேதனை (4) குளக்கரை

30. செத்தான், கண்டான், கொன்றான், செய்வித்தான் ஆகிய வினைச்சொற்களின் பகுதிகளை சரியாகக் கொண்ட தொகுதி
(1) செத்து, கண், கொன், செய் (2) சா, கண்டு, கொல், செய்வி
(3) சா, காண், கொன்று, செய்வி (4) சா, காண், கொல், செய்வி

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நீதிபதி குறித்த நாளில் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்கும்படி.............................. விடுத்தார்.
(1) அழைப்பாணை (2) பிடியாணை (3) கோரிக்கை (4) ஆட்கொணர்வுமனு

32. அரசின், நிதி தொடர்பான விடயங்களைச் செயற்படுத்துவது ....................................... ஆகும்.
(1) நிதியமைச்சு (2) சுங்கவரித் திணைக்களம்
(3) திறைசேரி (4) கணக்காய்வாளர் திணைக்களம்

33. மத்திய வங்கியின் தலைவர் ....................................... ஆவார்.
(1) ஆணையாளர் (2) ஆளுநர்
(3) முகாமையாளர் (4) பணிப்பாளர்

34. விபத்தாலேற்படக் கூடிய இழப்பை நிவர்த்திப்பதற்கு தனிநபரோ நிறுவனமோ முற்கூட்டியே செய்வது .................................... ஆகும்..
(1) சேமிப்பு (2) முதலீடு (3) மானியம் (4) காப்புறுதி

[பக். 4 ஐப் பார்க்க

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35. கடும்மழை பொழிந்ததனால் குளங்கள் .........................................
(1) எல்லாம் நிறைந்தது (2) ஒவ்வொன்றும் நிறைந்தது
(3) எல்லாம் நிறைந்தன (4) ஒவ்வொன்றாக நிறைந்தன.

36. நானா நீயா யார் இதைச் ..........................................?
(1) செய்தீர் (2) செய்தது (3) செய்தாய் (4) செய்தார்

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

"கானெலாம் மலர்ந்த முல்லை
 ககனமீ தெழுந்த தென்ன
வானெலாம் வயங்கு தாரை
 நிரைநிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்த
 வெள்ளிவெண் கும்ப மென்னத்
தூநிலா மதியம் வந்து
 குணதிசை தோன்றிற் றம்மா"

37. இப்பாடலில் வர்ணிக்கப்படுவது,
(1) காலைக்காட்சி (2) சந்திரோதயக்காட்சி
(3) கானகக்காட்சி (4) சூரியோதயக்காட்சி

38. இப்பாடலில் உவமானங்களாகக் கையாளப்பட்டவை,
(1) முல்லை, கும்பம் (2) தாரை, மதியம் (3) முல்லை, தாரை (4) கும்பம், மதியம்

39. 'தூநிலா மதியம் வந்து குணதிசை தோன்றிற்றம்மா' என்பதில் குணதிசை என்பது
(1) வடக்கு (2) தெற்கு (3) கிழக்கு (4) மேற்கு

- கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40. (அ) அவை இன்றோ நேற்றோ பாடப்பட்ட புதிய பாடல்கள் அல்ல.
(ஆ) இப்போதுதான் அவற்றை எல்லாம் நாட்டுப்பாடல் என்று பொறுக்கிச் சேர்த்துப் புத்தகம் ஆக்கி வருகிறார்கள்.
(இ) கிராமங்களில் உழவர்கள் பாடும் ஏற்றப்பாட்டு, ஏர்ப்பாட்டு முதலியவைகளைக் கேட்கிறோம்.
(ஈ) தலைமுறை தலைமுறையாகப் பாடிவந்த பாட்டுக்கள் அவை.
(உ) ஒருவர் மற்றொருவருக்குச் சொல்ல அவர் இன்னொருவருக்குச் சொல்ல இப்படியே நெடுங்காலமாகக் கற்றுக்கொள்ளப்பட்ட பாட்டுக்கள் அவை.
(1) இ, ஈ, உ, அ, ஆ (2) இ, அ, ஈ, உ, ஆ
(3) உ, ஆ, அ, ஈ, இ (4) உ, அ, இ, ஆ, ஈ

* *

[பக். 5 ஐப் பார்க்க

# தமிழ் மொழியும் இலக்கியமும் II

**கவனிக்க வேண்டியவை :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
"பசுமை குளிரிளஞ் சூடும்"

(ii) பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்துவழக்குத் தொடராக மாற்றி எழுதுக.
"ஐயா சாப்பிட்டு முடிஞ்சு ஆறுதலா இருக்கேக்க கேட்க வேணும்"

(iii) "இறை" என்ற சொல் பெயராகவும், வினையாகவும் வரத்தக்கதாக தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

(iv) மத்தில்ட்டாவும் கணவனும் துன்பக்கேணியில் நீந்தினார்கள்

(அ) இங்கு இடம் பெற்ற அணி யாது?

(ஆ) அதனை விளக்குக.

(v) "பூமரத்தின் இலைகளிலே வண்டினங்கள் மோதிப் புது மலர்கள் கோதி...."

(அ) இதில் வேற்றுமைத் தொகையாக வந்துள்ள தொடரைக் குறிப்பிடுக.

(ஆ) அது எத்தனையாம் வேற்றுமைத்தொகை

(vi) பின்வரும் தனிவாக்கியங்களை பொருத்தமான இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்திக் கூட்டுவாக்கியமாக்குக.

வானிலை சீரற்றுக் காணப்படுகிறது
மீனவர்கள் கடலுக்குச் செல்லமாட்டார்கள்.

(vii) "முள்ளாலே மகுடத்தை தலையில் வைத்து
ஞானமகன் நின்றவுடன் ஞாலமெலாம்
ஓர் பொழுது நடுங்கிற்றம்மா..." இதில்

(அ) எழுவாய் எது?

(ஆ) பயனிலை எது?

(viii) "கரிகாற்சோழன் கடாரம் வென்றான்" இவ்வாக்கியத்தைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(ix) பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி எழுதுக.
'நவீனமயப்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான நூலகம் அதிக பயனளிப்பதாக இருந்தது.'

(x) பின்வருவனவற்றுள் செவ்வி காண்பவருக்கு பெரிதும் **வேண்டப்படாத** பண்பு
துறைசார்ந்த அறிவு, சிறந்த மொழியறிவு, உணர்ச்சிவசப்படாத நிலை, சிறந்த விடையளிக்கும் ஆற்றல்

(20 புள்ளிகள்)

[{ பக். 6 ஐப் பார்க்க

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

(அ) நாம் உண்ணும் உணவே எமது ஆரோக்கியத்துக்கு அடிப்படையாகும். ஆனால் இன்றோ உணவுப் பழக்கவழக்கங்கள் தவறானவையாகக் காணப்படுகின்றன. இதனால் உடலின் ஆரோக்கியமும் பாதிப்படைகிறது. எனவே எமது உணவுப் பழக்கவழக்கங்களை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது. இன்றைய உணவுப் பழக்கவழக்கம், அதன் பாதிப்பு, அதனை மாற்றியமைக்க வேண்டிய முறைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ஆ) முப்பது வருடங்களுக்கு மேலாக ஆசிரியத் தொழில் புரிந்து தற்போது ஓய்வுபெற்றிருக்கும் ஆசிரியர் ஒருவரைச் சந்தித்து தொழிலில் அவரது ஈடுபாடு, அவரது சாதனைகள், கல்வி பற்றிய அவரது கருத்து, இன்றைய கல்விப் போக்கு என்பன குறித்து அவரிடம் நீர் கண்ட **பேட்டி**

(இ) உலகமயமாதல் காரணமாக மனிதர்களிடையே போட்டியும் சுயநலத் தன்மையும் மேலோங்கிச் செல்லும் போக்குக் காணப்படுகிறது. இதனால் மனித சமுதாயம் சீரழிந்த நிலைக்குச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலை மாறி அன்பு, இரக்கம் முதலிய மனிதநேயப் பண்புகள் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டியதன் அவசியம் பற்றி நீங்கள் நிகழ்த்தும் **மேடைப்பேச்சு**

(ஈ) ஆலங்குடிக் கிராமத்தைச் சேர்ந்த அபிராமிக்கு அண்மையில் நடந்து முடிந்த தேசியமட்ட விளையாட்டு விழாவில் பங்குபற்றச் சந்தர்ப்பம் கிட்டியது. அங்கு இடம்பெற்ற 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்டு சாதனை படைத்து அவள் தங்கப்பதக்கத்தைத் தட்டிக்கொண்டாள். அவளது சாதனையைப் பாராட்டிக் கௌரவிப்பதற்காக முழுக்கிராமமே ஒன்றுதிரண்டது. நடைபெறவுள்ள அந்நிகழ்வை எண்ணிய அபிராமியின் மனதில் சாதனைபுரிய முன் சந்தித்த சவால்களும் தட்டிக்கொடுப்புகளும் காட்சிகளாக விரிந்தன. அத்துடன் எதிர்காலத்தில் சாதிக்க வேண்டியவை பற்றிய எண்ணங்களும் மனக்கண்ணில் தோன்றின. அபிராமியின் சாதனைகள், சவால்கள் எதிர்காலக் கனவுகள் என்பவற்றைப் பிரதிபலிப்பதாக அமைந்த ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

**3.** கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40-45** சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.

இன்றைய காலகட்டத்தில் தொடர்பாடல் என்பது மிகப் பிரபல்யமானதும் அவசியமானதுமான ஒரு செயற்பாடாகி விட்டது. இன்று முழு உலகுமே ஒரு கிராமம் என்ற வகையில் சுருங்கிவிட்டமைக்கும், நெருங்கிவிட்டமைக்கும் இத்தொடர்பாடல்விருத்தியே அடிப்படைக் காரணமாகி விட்டது எனலாம்.

பழமைமிக்க தொடர்பாடல் முறையான கடிதம் முதல் தொலைபேசி, தொலைநகல் (பக்ஸ்) தொலைப்பதிவு (டெலக்ஸ்) இலத்திரனியல் தபால் (ஈமெயில்) போன்ற பல்வேறு ஊடகங்களும் அகில உலகத்தையுமே ஆட்டிப் படைக்கின்றன. மேற்கூறப்பட்ட பல்வேறு வகையான சாதனங்கள் தோற்றம் பெற்றுவிட்ட போதும் மனிதப் பண்பும் நேயமும் மிக்க நேரடித் தொடர்பானது எல்லாவற்றிலும் மேலானது என்று கூறலாம். உயர்ந்த அறிவும் ஆற்றலும் விஞ்ஞானத்தில் வியத்தகு சாதனைப் போக்கும் மிக்க மனிதன் தனது நாளாந்த தொடர்பாடலை பண்புடனும் சிறப்புடனும் மேற்கொண்டு ஊடாடும் உறவாடும் தன்மைகளைத் தன்னுள் வளர்த்துக் கொள்ளல் மிக அவசியமாகும்.

எமது நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு சந்தர்ப்பங்களின் போதும் தேவைகளின் போதும் நாம் பல்வேறு வகைப்பட்டவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அத்தகைய தொடர்பாடலானது பல்வேறு மட்டங்களில் இடம்பெறக் கூடும். வயதில் கூடியோருடனோ குறைந்தோருடனோ சமவயது உடையோருடனோவாகவும் இருக்கலாம். நம்மைவிட அறிவிலும் ஆற்றலிலும் கல்வியிலும் செல்வத்திலும் சிறப்புப் பெற்றவர்களுடனாகவும் இருக்கலாம். நமது நாட்டவர்களுடன் மட்டுமன்றி வேறு நாட்டவர்களுடனாகவும் இருக்கலாம். இவ்வாறு பல்வேறு வகைப்பட்டவர்களுடனும் நாம் தொடர்பாடல் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் நிகழ்காலத்தில் மட்டுமன்றி வருங்காலத்திலும் ஏற்படலாம். இதற்கு இசைவாக நாம் தொடர்பாடலைத் திறன்பட மேற்கொள்ளும் ஆற்றல், பண்பு என்பவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக நாம் நீதிமன்றத்திற்கு செல்லும் சந்தர்ப்பத்தை எடுத்துக் கொள்வோம். அவ்விடத்தில் நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைப் பின்பற்றி பண்புடன் நடந்து கொள்ளவில்லையெனின் கண்டிப்புக்கும் தண்டனைக்கும் ஆளாக நேரிடலாம்.

(10 புள்ளிகள்)

[{ பக். 7 ஐப் பார்க்க

**4.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மாறாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை. மொழி இதற்கு விலக்கு அல்ல. வாழும் மொழிகள் எல்லாம் இடையறாது மாற்றத்துக்கு உள்ளாகின்றன. அதனால் தொடர்ந்து வளர்ச்சியடைகின்றன. மாற்றமும் வளர்ச்சியும் ஒரு நிகழ்ச்சியின் இரு அம்சங்களாகும். மொழி ஒரு சமூக சாதனம் என்ற வகையில் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களும் வளர்ச்சிகளுமே மொழி மாற்றத்தையும் வளர்ச்சியையும் இறுதியாகத் தீர்மானிக்கின்றன. எனினும் முற்காலத்தில் மொழி வளர்ச்சி பெரிதும் பிரக்ஞை பூர்வமான ஒரு நிகழ்வாக இருக்கவில்லை. அதனாலேயே மொழி வளர்ச்சி பற்றிய திட்டங்களும் கொள்கைகளும் பழைய மொழி நூல்களில் காணப்படவில்லை. ஆனால் இன்றைய கைத்தொழில் நாகரிக யுகத்தில் பிறதுறைகள் போல மொழி வளர்ச்சியும் பிரக்ஞை பூர்வமான ஒரு நிகழ்வாக உள்ளது. மொழி வளர்ச்சி பற்றிய பல்வேறு கொள்கைகளும் திட்டங்களும் செய்முறைகளும் பின்பற்றப்படுகின்றன. கருத்து முரண்பாடுகளும் மோதல்களும் நிகழ்கின்றன. மொழியை நவீனப்படுத்துவதே இவற்றின் குறிக்கோள் ஆகும். மொழியை நவீனப்படுத்துதல் என்பது தற்கால சமூகத்தின் நவீன தொடர்பாடல் தேவைகளுக்கேற்ப மொழியை வளர்த்தல் அல்லது இணக்கப்படுத்தலேயாகும்.

(i) பந்தியில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயம் யாது?

(ii) மொழியின் மாற்றத்தையும் வளர்ச்சியையும் தீர்மானிக்கும் காரணிகள் எவை?

(iii) பழைய மொழி நூல்களில் மொழி வளர்ச்சி பற்றிய திட்டங்கள் பற்றி காணப்படாமைக்கான காரணம் யாது?

(iv) மொழியை நவீனப்படுத்தல் என்றால் என்ன?

(v) ‘மாற்றமும் வளர்ச்சியும் ஒரு நிகழ்ச்சியின் இரு அம்சங்களாகும்’ - விளக்குக.

(10 புள்ளிகள்)

**5.** இன்று பாடசாலைகளில் மூலிகைத்தோட்டம் அமைத்தல் தொடர்பான செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கமைவாக உமது பாடசாலையின் விஞ்ஞான மன்றத்தினால் மூலிகைத் தோட்டம் ஒன்றை அமைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. விஞ்ஞான மன்றத்தின் செயலாளராகக் கடமையாற்றும் நீங்கள் மூலிகைத் தோட்டம் அமைப்பதற்காக

- மூலிகைப் பயிர்களின் தேவைகள்
- அவை பற்றிய விளக்கங்கள், ஆலோசனைகள்
- பராமரிப்பு முறைகள்
- நேரடி உதவிகள்

என்பவற்றைக் கோரி உமது பிரதேச ஆயுர்வேதத் திணைக்கள அதிகாரிக்கு **100** சொற்களில் நீர் எழுதும் ஒரு **கடிதம்**

**அல்லது**

உங்கள் மாவட்ட இலக்கியப் பெருவிழா இம்முறை இருதினங்கள் கொண்டாடப்படவுள்ளது. மூவின கலாசார நிகழ்வுகளுக்கும் அதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. முதலாம் நாள் நிகழ்வுகள் இயல் சம்பந்தமானதாகவும் இரண்டாம் நாள் நிகழ்வுகள் கலைநிகழ்ச்சிகளாகவும் நடத்தப்படவுள்ளன. அவ்விழாவிற்கு அதிதிகளாகப் பெரியோர்கள் பலர் அழைக்கப்படவுள்ளனர். புரட்டாதி மாத நடுப்பகுதியில் இவ்விழா நடத்தப்படவுள்ளது. எனவே, பிரபல பத்திரிகை ஒன்றின் நிருபராக உம்மைக் கருதி, உங்கள் மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழா பற்றிய விடயங்களை உள்ளடக்கி **100** சொற்களில் நீர் எழுதும் **பத்திரிகைச் செய்தி**.

(15 புள்ளிகள்)

* *

# க.பொ.த (சா.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2016

| தமிழ் மொழியும் இலக்கியமும் III | இரண்டு மணித்தியாலம் |
| --- | --- |

**கவனிக்க வேண்டியவை :**

* அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* **1,2,3,4** ஆகிய வினாக்களுக்கும் **5,6,7** ஆம் வினாக்களில் யாதேனும் **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) "உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவை போல்
தப்பிய கந்தைபீ தாம்பரம் போல்......."

(அ) இங்கு அறுசுவை உணவாகக் கருதப்படுவது எது?

(ஆ) 'தப்பிய கந்தை' என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(ii) "வெங்கட் பிறைக்கும் கரும் பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே....

(அ) கரும்பிறை என்பது யாரைக் குறிக்கிறது?

(ஆ) 'அப்பிறைக்கும்' என்பதன் பொருளைத் தருக.

(iii) "சத்யஜித்ரேயின் பதேர்பாஞ்சாலியில் பருவங்கள் மாறுவதை சில மயங்கித் தெளிதல்கள் மூலம் உணர்த்துகிறார்."

(அ) பதேர்பாஞ்சாலி என்பது எவ்வகைக் கலை வடிவம்?

(ஆ) இங்கு 'மயங்கித் தெளிதல்' என்றால் என்ன?

(iv) "கலியுக அரிச்சந்திரனாக மகாத்மா காந்தியடிகள் வாழ்க்கை நடத்தினார். அவருக்கு சத்தியமே பெரிது"

(அ) காந்தியடிகளைக் 'கலியுக அரிச்சந்திரன்' எனக் குறிப்பிடுவதன் காரணம் யாது?

(ஆ) காந்தியடிகளின் வாழ்வின் இலட்சியமாகவிருந்தது எது?

(v) "கைவிடுவேன் என்று எண்ணிக் கவலைப்படாதே கண்ணார்
அல்லாமேல் ஆணை - உன்னை அடையாட்டி காட்டுப்பள்ளி"

(அ) கவலை ஏற்படுவதற்கான காரணமாகக் காட்டப்படுவது எது?

(ஆ) 'காட்டுப்பள்ளி' என்பதன் பொருள் யாது?

(vi) "சுடு மயானத்திடை தன்றுணையேகத்
தோன்றறுயர்க் கடலினேகக் ...."

(அ) 'துணை' எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

(ஆ) 'துயர்க்கடல்' என்பது எவ்வகை அணி?

(vii) "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற நிகரற்ற மனநிலை தமிழர் பண்பாட்டின் அரிய கோட்பாடுகளுள் ஒன்றாகும்."

(அ) 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதன் மூலம் வெளிப்படும் உயர் பண்பு எது?

(ஆ) இங்கு வையகம் என்பது குறிப்பாக யாரைக் குறிக்கிறது?

(viii) "....இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தரெம் குன்றுங் கொண்டார்........"

(அ) இங்கு முரசின் வேந்தர் யாவர்?

(ஆ) "எம் குன்று" என்பதில் குறிப்பிடப்படும் குன்று எது?

[பக் 2 ஐப் பார்க்க

(ix) “ஐவராம் அவனிபர்க்கும் நினைவு ஏது என்று
அருள் புரிந்தான் அமரர் கோமான்”

(அ) ஐவராம் அவனிபர் என்று குறிப்பிடப்படுபவர் யாவர்?

(ஆ) ‘அமரர் கோமான்’ என இங்கு குறிப்பிடப்படுபவர் யார்?

(x) “என்னத்துக்கு, இந்த வண்டிலுக்கு குடிலப் போல ஓல கட்டினீங்க” கேட்டேன். “மழ வெய்யில்ல நனயாம அவவ கொண்டு போகணும்”

(அ) ‘அவவ’ என்று குறிப்பிடப்படுபவர் யார்?

(ஆ) இவ்வரிகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் உணர்வு யாது?

(20 புள்ளிகள்)

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்

(அ) இச்செய்யுளில் கூறப்படும் பிரதான கருத்து யாது?

(ஆ) அது எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?

(ii) கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலினுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால்கொண்டு வண்கவிதை
மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கி மின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே.

(அ) கவியாற்றல் மிக்க புலவர்களுடைய பொது இயல்புகளாகக் குறிப்பிடப்படுபவை எவை?

(ஆ) காளமேகப் புலவரின் கவியாற்றல் எவ்வாறு விளக்கப்படுகிறது?

(iii) சூடுகின்ற துழாய் முடியோன் சுரருடனே
முனிவர்களும் சுருதி நான்கும்
தேடுகின்ற பதம் சிவப்ப திரு நாடு
பெறத் தூது செல்ல வேண்டா
வாடுகின்ற மடப் பாவை தன் வரமும்
என் வரமும் வழுவா வண்ணம்
கோடுகின்ற மொழியவன்பால் எனைத்தூது
விடுக இனி கொற்ற வேந்தே

(அ) கண்ணனது சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?

(ஆ) வீமன் தன்னைத் தூதாக அனுப்பும்படி வேண்டியது ஏன்?

(iv) சினிமா, காமிராவினால் பதிவு செய்யப்பட்ட பல்சுவை நிகழ்ச்சியல்ல. எந்த ஒரு படத்திலும் இழையோடும் ஒரு மையக்கரு ஒன்று இருக்கும். இந்தக் கருவைச் சாராத எந்தக் காட்சி படிமத்துக்கும், ஒலிக்கும் அப்படத்தில் இடமில்லை. அப்படிச் சம்பந்தமில்லாத காட்சி வந்தால் அது சினிமாவாக இல்லாமல் படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சி ஆகிறது. சினிமா, வாய்ப்பேச்சால் வார்த்தைகளால் சொல்லப்படுவதல்ல. அப்படி இருந்தால் அதற்கு ஒரு திரை தேவையிருக்காது. ஒலிநாடாவிலோ வானொலியிலோ கேட்டுத் திருப்தி அடைய முடியும்.

(அ) இங்கு நல்ல சினிமாவின் சிறப்புக்களாக குறிப்பிடப்படுவன யாவை?

(ஆ) ஒரு சினிமா எப்போது பல்சுவை நிகழ்ச்சியாகிறது?

[பக் 3 ஐப் பார்க்க

(v) தசரதன் இரண்டு இலட்சியங்களிடையே ஊசலாடுகின்றான். ஒன்று அரசியல். மற்றையது சத்தியம். இவ்விரண்டில் ஒன்றைத் தெரிவு செய்வதில் அவன் திண்டாடுகிறான். அரசியற் கொள்கையின் படி மூத்த புதல்வனுக்கு முடிசூட்டுவதா? அல்லது கைகேயிக்குக் கூறிய சத்தியவாக்கை நிலைநாட்டுவதா? இந்த தரும சங்கடத்தின் மத்தியில் ஊசலாடும் அரசன் நினைக்கின்றான். அரசியல் நிலைமாறக் கூடியது. சத்தியம் நிலைமாறாதது. நிலைமாறும் தன்மையுள்ள அரசியற் கொள்கையைக் கைவிடுவேன்.

(அ) தசரதனது ஊசலாட்ட நிலையை எடுத்துக் காட்டுக.

(ஆ) இறுதியில் தசரதன் எடுத்த முடிவில் எது முதன்மைப்படுத்தப்படுகிறது?

(20 புள்ளிகள்)

**3.** **கம்பியூட்டர்** என்ற சிறுகதையில்

(அ) கம்பியூட்டர் கொள்வனவு

(ஆ) கம்பியூட்டரால் குடும்பத்தில் ஏற்பட்ட மாற்றம்

ஆகியன விளக்கப்படுமாற்றினைத் தருக.

**அல்லது**

**இலட்சியமும் சமநோக்கும்** என்ற இலக்கியக் கட்டுரையில்

(அ) இலட்சியமும் இலக்கியங்களும்

(ஆ) இலட்சியமும் சமூக உருவாக்கமும்

தொடர்புபடுமாற்றினை விளக்குக. (15 புள்ளிகள்)

**4.** **நாட்டார் பாடல்கள்** பகுதியில்

(அ) 'ஏர்ப்பாடலின்' ஊடாக நல்ல சிந்தனைகளும்

(ஆ) 'அரிவி வெட்டு' பற்றிய பாடலில் ஐயனாரிடம் செய்யப்படும் வேண்டுதல்களும்

(இ) 'காதற்பாட்டில்' ஆழமான காதல் உணர்வுகளும்

முன்வைக்கப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

**அல்லது**

**தத்தை விடுதூது** என்னும் பகுதியில்

(அ) அக்காலப் பெண்களின் சமூகநிலை

(ஆ) அச்சமூகநிலை மாற்றியமைக்கப்பட வேண்டிய முறை

ஆகியன வெளிப்படுமாற்றினை விளக்குக. (15 புள்ளிகள்)

- பின்வரும் **5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவு செய்து விடை எழுதுக.

**5.** **தமிழ்ப் பண்பாடு** எனும் இலக்கியக் கட்டுரையில் இருந்து

(அ) தமிழ்ப்பண்பாட்டின் கோட்பாடுகள்

(ஆ) தமிழர்களின் பரந்த உலக மனப்பான்மை

என்பன பற்றி கட்டுரையாசிரியரால் வெளிப்படுத்தப்படும் விடயங்களை எழுதுக.

(10 புள்ளிகள்)

**6.** **குகப்படலத்தில்** பரதன் குகனுக்கு

(அ) கோசலை

(அ) சுமித்திரை

ஆகியோரை அறிமுகஞ் செய்யும் பாங்கினை விளக்குக. (10 புள்ளிகள்)

**7.** **சீறி ஓடாத வருங்கால மனித நதி** எனும் கவிதையில்

(அ) எழுத்தறிவின்மையின் அவலம்

(ஆ) இளைஞனின் எதிர்காலம் பற்றிய கவிஞரின் ஏக்கம்

ஆகியன சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக. (10 புள்ளிகள்)

* * *